


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 27.12.2019


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- தரவரிசைப்பட்டியல்








# தமிழக நிகழ்வுகள்

- **நல்லாட்சி மாநிலம் : தமிழகம் முதலிடம்**
  - இந்தியாவிலேயே சிறந்த நல்லாட்சிக்கான குறியீட்டில் தமிழகத்திற்கு முதலிடம் வழங்கி மத்திய அரசு கௌரவித்துள்ளது.
  - தரவரிசைப் பட்டியலில் தமிழகத்திற்கு 5.62 புள்ளிகள் வழங்கியுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - தேசிய நல்லாட்சி தினத்தை முன்னிட்டு மத்திய நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்க்கும் துறைக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
    - பொதுமக்களுக்கு நலத் திட்டங்களை அளிக்க கூடிய 17 அரசுத் துறைகளில் இருந்து பெறப்பட்ட விவரங்கள் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.
    - சட்டம், ஒழுங்கு, பொது உள்கட்டமைப்பு, சுகாதாரம் ஆகிய பிரிவுகளில் முதலிடமும், சுற்றுச்சூழல் துறையில் 3-ஆவது இடமும் அளிக்கப்பட்டுள்ளது.

# தேசிய நிகழ்வுகள்

- **வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தை கௌரவித்து நினைவு தபால்தலை வெளியிடப்பட்டது.**
  - நாட்டின் பாதுகாப்பிற்கு வருவாய் புலனாய்வு இயக்குநரகம்

We Shine Academy TM

செய்துள்ள பங்களிப்பை நினைவு கூறும் பொருட்டு மத்திய நிதியமைச்சர் தபால் தலையை வெளியிட்டார்.

- கடத்தலை தடுக்கவும், நாட்டிலுள்ள கலாச்சார பாரம்பரியங்களையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வருவாய் புலனாய்வு இயக்குநரகம் செயல்படுகிறது.
- **செய்தி துளிகள் :**
  - வருவாய் புலனாய்வு இயக்குநரகம் கடந்த 1957-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
  - கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் மறைமுக வரிகள் மற்றும் சுங்கத்துறை மத்திய வாரியத்தின் கீழ் இப்பிரிவு உருவாக்கப்பட்டது.
  - கள்ள நோட்டுகள், போதைப் பொருட்கள், தங்கம், ஆயுதங்கள் கடத்தப்படுவதை தடுக்கும் முதன்மை புலனாய்வு அமைப்பாக இது உள்ளது.

- **மூத்த குடிமக்கள் ஓய்வூதிய திட்டத்திற்கு ஆதார் கட்டாயம் என மத்திய அரசு அறிவிப்பு.**
  - மூத்த குடிமக்களுக்கு பிரதமரின் மூத்த குடிமக்கள் ஓய்வூதிய திட்டத்தின் படி ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.
  - மத்திய நிதி அமைச்சகம் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதிய திட்டம் 2017–18 நிதியாண்டின் பட்ஜெட் அறிவிப்பில் வெளியிடப்பட்டது.

- இந்த திட்டத்தை எல்ஐசி நிறுவனம் அமல்படுத்தி வருகிறது.
- இந்த திட்டத்தில் சேருவோருக்கு உறுதியளிக்கப்பட்ட 8 சதவீத வட்டி வழங்கப்படுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **விஸ்டன் சிறந்த வீரர்கள் பட்டியலில் விராட் கோலி இடம் பெற்றுள்ளார்.**
  - கடந்த 10 ஆண்டுகளில் மிகவும் சிறப்பாக ஆடிய 5 வீரர்கள் பட்டியலில் விராட் கோலி, ஸ்டீவ் ஸ்மித், டேல் ஸ்டெயின், டிவில்லியர்ஸ், எல்ஸி பெர்ரி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
  - இவர்களில் எல்ஸி பெர்ரி ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் வீராங்கனை ஆவர்.
  - **செய்தி துளிகள் :**
    - இந்திய கேப்டன் விராட் கோலி கடந்த 10 ஆண்டுகளில் அனைத்து வகையான போட்டிகளிலும் சராசரி 50 வைத்துள்ள ஒரே வீரர் ஆவார்.
    - 2019 ஆம் ஆண்டு மட்டும் 2370 ரன்களை விளாசியுள்ளார்.
    - விஸ்டன் ஒருநாள் அணியில் தோனி, ரோகித், கோலி இடம்பெற்றுள்ளனர்.

## நியமனங்கள்

- **தமிழகப் பிரிவு ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் சங்கத் தலைவராக**



We Shine Academy ™

**பணீந்திர ரெட்டி தேர்வு.**

- ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.
- தமிழக பிரிவு ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் சங்க தலைவராக இருந்த சோமநாதன் தில்லி பணிக்கு சென்றதால் பதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இதே போன்று செயலாளராக எம்.எஸ்.சண்முகம் ஐ.ஏ.எஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தரவரிசைப்பட்டியல்

- **சிறந்த நிர்வாகம் உள்ள மாநிலங்கள் பட்டியல் வெளியீடு**
  - நாட்டில் சிறந்த நிர்வாகத்தை கொண்ட மாநிலப் பட்டியலில் தமிழகம் முதலிடத்திலும், மகாராஷ்டிரா 2-ம் இடத்திலும், கர்நாடகம் 3-ம் இடத்திலும் உள்ளன.
  - பெரிய மாநிலங்கள், வடகிழக்கு மற்றும் மலைப்பகுதி மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் என மூன்று பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன
  - **செய்தி துளிகள் :**
    - வடகிழக்கு, மலைப்பகுதி மாநிலங்களின் பட்டியலில் ஹிமாச்சலப் பிரதேசம் முதலிடத்தை பிடித்துள்ளது.
    - சிறந்த நிர்வாகம் உள்ள யூனியன் பிரதேசங்கள் பட்டியலில் புதுச்சேரி முதலிடம் பிடித்துள்ளது.
    - வேளாண்மை, அது சார்ந்த துறைகள் சிறப்பாக உள்ள மாநிலங்களின் பட்டியலில் மத்திய பிரதேசம் முதலிடம்.

- நீதி மற்றும் பொதுமக்களுக்கு சிறப்பான பாதுகாப்பு உள்ள மாநிலம் பட்டியலில் தமிழகம் முதலிடம்.

## திருக்குறள்

**குறள் எண் : 59**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம்

**குறள் :**

**புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை.**

**விளக்கம் :** கற்பினால் உண்டாகும் புகழுடைய மனைவி பெறாதவர், தம்மை இகழ்ந்து பேசும் பகைவர் முன்னால் பெருமிதமாக நடக்க முடியாது.

We Shine Academy™